தஞ்சை மாவட்டத்தில் விவசாயக் கிடங்குகளில் நீண்ட நாட்களுக்கு முன் வாங்கப்பெற்று, வீரியமிழந்த நிலையில் உள்ள பூச்சி மருந்துகளை விநியோகிக்காது தடுப்பது குறித்து

[திரு. மு. அம்பிகாபதி] [1977 ஆகஸ்ட் 8

தமிழகத்தில் பல இடங்களில் பாதித்துள்ள இந்த விஷயத்தைப் பற்றி வேளாண்மைத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்துள்ளேன். இது குறித்து கவனம் செலுத்தி, வீரியம் உள்ளதா, இழந்திருக்கிறதா என்பதை அறிந்து, அறிக்கை வைத்துள்ளமைக்கு நன்றி. இது குறித்து மேலும், இது எப்போது வாங்கப்பட்டது, யாரால் இந்த டெண்டர்கள் கொடுக்கப்பட்டன, எந்தெந்தக் கம்பெனிகளுக்குக் கொடுக்கப் பட்டன என்பதைப் பற்றிய விவரங்களை அமைச்சர் அவர்கள் சேகரித்து, இந்த அவையில் தருவார்கள் என்று நம்பி, முடித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்த யோசனைகள் பரிசீலிக்கப்படும். மேலும் விவரங்கள் வேண்டுமென்றால் அதற்காக, தனிக் கேள்வி போடுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

5. கவன ஈர்ப்பு தகவல் கோரல்.

காவிரி நீர்ப்பிரச்சினை குறித்த கவன ஈர்ப்பு எடுத்துக்கொள்வது குறித்து.

திரு. செ. இராமலிங்கம் : தலைவரவர்களே, தஞ்சை மாவட்டத்தின் முக்கியப் பிரச்சினையான தண்ணீர்ப் பிரச்சினையைப் பற்றி விவாதிக்க இந்த அவையை ஒத்திவைக்க வேண்டுமென்று தீர்மானம் கொடுத்திருந்தேன் அந்த கவன ஈர்ப்பு தீர்மானம் எடுத்துக் கொள்ளப்படுமென்று சபாநாயகர் அறிவித் திருந்தார்கள். ஆறு, ஏழு நாட்களாக தஞ்சை மாவட்டத்தில் தண்ணீர் இல்லாத காரணத்தால், பெரிய கொந்தளிப்பு ஏற்பட்டு, விவசாயிகள் போராட்டங்களை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அதிலும், காவிரிப் பிரச்சினை என்று சொன்னால், பேப்பரிலேதான் தண்ணீர் வந்து இருக்கிறதே தவிர, ஆறுகளிலும், கால்வாய்களிலும் தண்ணீர் இல்லை என்ற காரணத்தால் கொந்தளிப்பு நிலை இருக்கிறது. விவசாயத் தொழிலாளர்கள் எல்லாம் வறுமையில் வாடிக் கொண்டிருக் கிறார்கள். இப்படிப்பட்ட முக்கியமான பிரச்சினையைக் குறித்து விவாதிக்க, எனது தீர்மானத்தை எடுத்துக் கொள்ள வேண்டு மென்று வற்புறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அந்த கவன ஈர்ப்புத் தீர்மானம் பற்றி சம்பந்தப்பட்ட அமைச்சருக்கும், மேலும் அதிகாரிகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்டிருக்கிறது. பதில் வந்து விடுமானால், தயங்காமல் இந்த அவையில் அது வைக்கப்படும். அது வருகிற வரை, உறுப்பினர் பொறுத்தருள வேண்டுகிறேன்.

(6). 1977-78 ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும்—வாக்கெடுப்பும்—தொடர்ச்சி.

கோரிக்கை எண் 28—சமுதாய நல வளர்ச்சித் திட்டங்கள் முதலியன.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவரவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல், கீழ்க்கண்ட தீர்மானத்தை முன் மொழிகிறேன்:

"நிதிக் கோரிக்கை எண் 28—சமுதாய நல வளர்ச்சித் திட்டங்கள் முதலியன என்ற தலைப்பின் கீழ், ரூ. 32,12,69,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்."

திரு. து. இராசரத்தினம்: தலைவரவர்களே, ஆவடி நகரீயம் நகராட்சியாக ஆக்குவது பற்றியும் அங்கு தேர்தல் நடத்துவது பற்றியும் விவாதிக்க,

"நிதிக் கோரிக்கை எண் 28—சமுதாய நல வளர்ச்சித் திட்டங்கள் முதலியன என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகிற ரூ. 32,12,69,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்"

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன் மொழிகிறேன்.

திரு. நா. சௌந்தரராஜ்: தலைவரவர்களே, சமுதாய நலத் திட்டத்திற்கும் ஊராட்சி ஒன்றியங்களுக்கும் அதிக நிதி ஒதுக்காததைப் பற்றி விவாதிக்க,

"நிதிக் கோரிக்கை எண் 28—சமுதாய நல வளர்ச்சித் திட்டங்கள் முதலியன என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகிற ரூ. 32,12,69,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்"

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. என். வரதராஜன்: தலைவரவர்களே, நகராட்சிகளின் வருவாய் பெருக, பெரும் உணவு விடுதிகள், தங்கும் விடுதிகள்